(சுருக்கம்)

திருத்திய ஊதிய விகிதங்கள், 2009 – பள்ளிக் கல்வி மற்றும் தொடக்கப் பள்ளிக் கல்வித் துறைகளின் கீழ் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு ஊதிய திருத்தம் மற்றும் தனி ஊதியம் அனுமதித்து ஆணையிடப்படுகிறது.

---

**நிதி(ஊதியப் பிரிவு)த் துறை**

அ.ஆ. நிலை எண்:23

நாள்: 12—01—2011.
மார்கழி, **28.**
திருவள்ளுவர் ஆண்டு, **2041.**

படிக்கவும்:--

1. அ.ஆ.நிலை எண் **234**, நிதி (ஊதியப் பிரிவு) த்துறை, நாள்: 01—6—2009.
2. அ.ஆ.நிலை எண் **270**, நிதி (ஊதியப் பிரிவு) த்துறை, நாள்: 26—8—2010.
3. பல்வேறு ஆசிரியர் சங்கங்களிடமிருந்து பெறப்பட்ட மனுக்கள்.

- - - - - -

**ஆணை** :--

அலுவலர்குழு, **2009**-ன் பரிந்துரைகளின்படி பள்ளிக் கல்வி மற்றும் தொடக்கப் பள்ளி கல்வித் துறைகளின் கீழ் பணிபுரியும் ஆசிரியர்களின் திருத்திய ஊதிய விகிதங்கள் அவர்களின் முந்தைய ஊதிய விகிதங்களுக்கு நிகரான திருத்திய ஊதியம் நிர்ணயம் செய்யப்பட்டு 1—1—2006 முதல் கருத்தியலாகவும் 1—1—2007 முதல் பணப்பயன் பெறும் வகையில் மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் ஆணைகள் வெளியிடப்பட்டன.

**2)** பின்னர் ஒரு நபர் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் இடைநிலை ஆசிரியர்கள் மற்றும் உயர்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு மட்டும் மாதம் ஒன்றுக்கு ரூ.**500/–** சிறப்புப்படி 1—8—2010 முதல் அனுமதித்து மேலே இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில் ஆணைகள் வெளியிடப்பட்டது.

**3)** இந்நிலையில் பல்வேறு ஆசிரியர் சங்கங்கள் இடைநிலை ஆசிரியர், பட்டதாரி ஆசிரியர், முதுகலை பட்டதாரி ஆசிரியர், தொடக்கப் பள்ளி தலைமையாசிரியர், நடுநிலைப் பள்ளி தலைமையாசிரியர், உயர்நிலைப் பள்ளி தலைமையாசிரியர் மற்றும் மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர் / மாவட்ட கல்வி அலுவலர்கள் ஆகியோரின் ஊதிய விகிதங்களை மைய அரசின் கட்டுப்பட்டின் கீழ் இயங்கும் பள்ளிகளில் உள்ள சமநிலை ஆசிரியர் பணியிடங்களுக்கு இணையாக திருத்தி அமைத்து ஆணைகள் வெளியிடுமாறு அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.

**4)** பல்வேறு ஆசிரியர் சங்கங்களின் கோரிக்கைகளை அரசு நன்கு ஆராய்ந்ததில் சாதாரண நிலை இடைநிலை ஆசிரியர்களுக்கு திருத்தியமைக்கப்பட்ட சம்பள அமைப்பில்

/த.பி.பா/

ஊதிய தொகுப்பு—2-ல் உள்ள ஊதியமான ரூ.9300—34800 + தர ஊதியம் ரூ.4200 அனுமதித்தால் முந்தைய ஊதிய குழுக்களில் ஊதிய விகிதங்களில் சம நிலையில் இருந்த பிறவகை பணியிடங்கள், அமைச்சுப் பணியாளர்கள் மற்றும் இடைநிலை ஆசிரியர்களுக்கும் இடையே உள்ள ஊதிய வித்தியாசம் மேலும் கூடுதலாகி முரண்பாடான நிலையை உருவாக்கும் என்பதைக் கருத்தில் கொண்டு இடைநிலை ஆசிரியர்களுக்கு ஊதிய திருத்தத்திற்கு மாற்றாக ஒரு நபர் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் தற்போது சாதாரண நிலையில் ரூ.5200—20200 + தர ஊதியம் ரூ.**2800**/- பெறும் இடைநிலை ஆசிரியர்களுக்கு மாதம் ஒன்றுக்கு தற்போது வழங்கப்படும் ரூ.**500/–** சிறப்புப் படிக்கு பதிலாக மாதம் ஒன்றுக்கு ரூ.750/-ஆக உயர்த்தி அதனை தனி ஊதியமாக வழங்க அரசு ஆணையிடுகிறது. மேலும், சாதாரண நிலையில் உள்ள இடைநிலை ஆசிரியர்களுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் சிறப்புப் படிக்கு மாற்றாக அனுமதிக்கப்படும் தனி ஊதியம் இடைநிலை ஆசிரியர் தரத்தில் சாதாரண நிலையில் உள்ள பிறவகை ஆசிரியர் பணியிடங்களுக்கும் (other posts in the cadre of Secondary Grade Teacher) பொருந்தும். இவ்வாறே ரூ.9300—34800 + தர ஊதியம் ரூ.4600/- பெற்றுவரும் சாதாரண நிலையில் உள்ள உயர்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்கள் தற்போது பெற்றுவரும் ரூ.500/- சிறப்புப் படிக்கு பதிலாக மாதம் ஒன்றுக்கு ரூ.750/- தனி ஊதியமாக வழங்கவும் அரசு ஆணையிடுகிறது. இத்தனி ஊதியம் வரும் காலங்களில் ஆண்டு ஊதிய உயர்வுக்கும் அகவிலைப்படிக்கும், ஓய்வூதியத்திற்கும் கணக்கில் கொள்ளப்படும். மேலும், தற்போது தேர்வுநிலை மற்றும் சிறப்பு நிலையில் முறையே ரூ.**9300**—**34800** + தர ஊதியம் ரூ.**4300**/- மற்றும் ரூ.**9300**—**34800** + தர ஊதியம் ரூ.4500/- பெறும் இடைநிலை ஆசிரியர்கள் மற்றும் தேர்வுநிலை மற்றும் சிறப்பு நிலையில் பணியாற்றும் உயர்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கு தற்போது அனுமதிக்கப்பட்டு வரும் சிறப்புப் படியான ரூ.**500**/- தொடர்ந்து பெற அனுமதித்தும் அரசு ஆணையிடுகிறது.

**5)** மேலும், அலுவலர்குழு மற்றும் அதனைத் தொடர்ந்து நியமிக்கப்பட்ட ஒரு நபர் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் பட்டதாரி ஆசிரியர், முதுகலை பட்டதாரி ஆசிரியர், தொடக்கப்பள்ளி தலைமையாசிரியர், நடுநிலைப்பள்ளி தலைமையாசிரியர் மற்றும் மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர் / மாவட்ட கல்வி அலுவலர்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட ஊதிய விகிதத்தில் உள்ள ஊதிய முரண்பாடுகளைக் களைந்து தக்க ஊதிய திருத்தங்கள் மேற்கொள்ள வேண்டியது அவசியம் எனக்கருதி அதன் அடிப்படையில் ஆசிரியர் பணியிடங்களுக்கு கீழ்கண்டவாறு ஊதிய திருத்தங்கள் செய்து அரசு ஆணையிடுகிறது:--

| **வ. எண்** | **பதவியின் பெயர்** | **தற்போதைய ஊதிய விகிதம் + தர ஊதியம்** | **திருத்திய ஊதிய விகிதம் + தர ஊதியம்** |
|---|---|---|---|
| | | **ரூ.** | **ரூ.** |
| **1.** | பட்டதாரி ஆசிரியர் | 9300—34800+4400 | 9300—34800+4600 |
| **2.** | முதுகலை பட்டதாரி ஆசிரியர் | 9300—34800+4600 | 9300—34800+4800 |
| **3.** | தொடக்கப்பள்ளி தலைமையாசிரியர் | 9300—34800+4300 | 9300—34800+4500 |
| **4.** | நடுநிலைப்பள்ளி தலைமையாசிரியர் | 9300—34800+4500 | 9300—34800+4700 |
| **5.** | மேல் நிலைப்பள்ளி தலைமையாசிரியர்/ மாவட்ட கல்வி அலுவலர்கள் | 15600—39100+5400 | 15600—39100+5700 |

**6)** மேற்கூறிய ஊதிய திருத்தங்கள் **1–1–2006** முதல் கருத்தியலாகவும் பணப்பயன் 1-1-2011 முதல் பெறும் வகையிலும் தனி ஊதியம் **1–1–**2011 முதல் பெறும் வகையிலும் நடைமுறைப் படுத்தப்படும்.

**/ஆளுநரின் ஆணைப்படி /**

**க. சண்முகம்,**
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
முதன்மைச் செயலாளர், பள்ளிக் கல்வித் துறை, சென்னை—**9.**
இயக்குநர், பள்ளிக் கல்வித் துறை, சென்னை—6.
இயக்குநர், தொடக்கப்பள்ளிக் கல்வித்துறை, சென்னை—6.
மாநில கணக்குத் துறைத் தலைவர், கணக்குகள்(ம) உரிமைத் தொகை, சென்னை-**18.**
முதன்மை மாநில கணக்குத் துறைத் தலைவர்(துணிக்கை—1 & 2), சென்னை -18.
மாநில கணக்குத் துறைத் தலைவர்(CAB), சென்னை -9 / மதுரை.
ஆணையர், கருவூலக் கணக்குத் துறை, சென்னை—15.
ஆணையர், சென்னை மாநகராட்சி, சென்னை-3.
சம்பளம் மற்றும் கணக்குகள் அலுவலர், தலைமைச் செயலகம், சென்னை--9.
சம்பளம் மற்றும் கணக்குகள் அலுவலர்(வடக்கு/தெற்கு/கிழக்கு), சென்னை—1/35/5.
சம்பளம் மற்றும் கணக்குகள் அலுவலர், மதுரை—**625 001.**
அனைத்து கருவூல அலுவலர்கள்/அனைத்து துணைக் கருவூல அலுவலர்கள்.

<u>நகல் பெறுவோர்:</u>
மாண்புமிகு முதலமைச்சரின் செயலாளர், சென்னை—9.
மாண்புமிகு துணைமுதலமைச்சரின் செயலாளர், சென்னை—9.
மாண்புமிகு நிதியமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை—9.
மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சரின் தனிச் செயலாளர், சென்னை—9.
அரசு தலைமைச் செயலாளரின் தனிச் செயலாளர், சென்னை—9.
அரசு முதன்மைச் செயலாளரின் தனிச் செயலாளர், நிதித்துறை, சென்னை—9.
பள்ளிக் கல்வித் துறை, சென்னை—9.
நிதி (கல்வி--1)த் துறை, சென்னை—9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

**/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/**

சு. ஸ்ரீதர்
12/1/2011

ஆராய்ச்சி அலுவலர்.